**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 23.07.2026

அசல் வழக்கு எண். 354/2024

வா.சா. 1. – கலா க/பெ.மகேந்திரன் என்பவரை பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பார்த்தால் தான் தெரியும். சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 7 ½ செண்ட் ஆகும். யார் அளவு சொன்னார் என்றால் கிரயம் கொடுத்தவர் சொன்னார். எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால் 10 -12 வருடங்கள் இருக்கும். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அடமானமாக எழுதிய ஆவணத்தை பவர் ஆவணமாக எழுதிகொண்டார்கள். அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அடமானம் எழுதிய வருடம் என்னவென்றால் 13-14 வருடங்கள் இருக்கும். நான் யாரிடம் பணம் கேட்டேன் என்றால் யுவராஜ் உம்முல்பட்டு கிராமம் என்பவரிடம் கேட்டேன். அவர் பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் எல்லோருக்கும் பணம் வாங்கி தருவார். எவ்வளவு பணம் கேட்டேன் என்றால் ரூ.50000/- கேட்டேன். பணம் கொடுத்தாரா என்றால் ரூ.50000/- பணம் கொடுத்தார். பிரதிவாதிகள் முரளிதரன், தினேஷ்குமார் ஆகியோர்களை எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் அவர்களிடம் தான் எங்கள் வீட்டு அசல் பத்திரம் இருப்பதாக சொன்னார்கள். நான் யாரிடம் பத்திரம் கொடுத்தேன் என்றால் யுவராஜிடம் அவரது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது தான் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்களா என்றால் இல்லை. பத்திரம் கொடுத்து 2 மாதம் கழித்து எனது வீட்டிற்கு யுவராஜ் வந்து பணம் கொடுத்தார். பத்திரத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த அன்று இரவு வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தார். எந்த சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்றால் வாலாஜாபாத். என்னுடன் யார் வந்தார் என்றால் என் கணவர் மகேந்திரன் வந்தார். அவருக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்க தெரிந்தவர்களை அழைத்துசென்றேனா என்றால் இல்லை. அவர்கள் யாரையும் அழைத்து வரவேண்டாம் என்றும், உனக்கு தான் அவமானம் என்பதாக சொல்லிவிட்டார்கள். அதனால் வேறு யாரையும் அழைத்து செல்லவில்லை. எனது கணவர் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். எனது கணவர் பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.2 தவிர வேறு ஆவணத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. எவ்வளவு வட்டிக்கு பணம் கொடுத்தார்கள் என்றால் வட்டி வேண்டாம் என்றும், அசல் தொகை கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள். அசல் தொகையை நான் எப்போது திரும்ப கொடுத்தேன் என்றால் எனது மாமியார் இடத்தை விற்று பணத்தை 1 ½ ஆண்டில் கொடுத்தேன். அதை யாரிடம் கொடுத்தேன் என்றால் முரளிதரனிடம் கொடுத்தேன். முரளிதரன் எந்த ஊர் என்றால் சென்னை. எந்த இடம் என்று குறிப்பிட்டு தெரியாது. கோயம்பேடு சென்று பணம் கொடுத்தேன். யுவராஜிடம் பணம் வாங்கிவிட்டு முரளிதரனிடம் ஏன் பணம் கொடுத்தேன் என்றால் யுவராஜையும் அழைத்துக்கொண்டு கோயம்பேடுக்கு சென்று முரளிதரனுக்கு போன் செய்து அவர் போனை எடுக்கவில்லை என்பதால் திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுமுறை முரளிதரனுக்கு போன் செய்து கேட்டபோது காசு எடுத்து வர சொன்னார்கள். காசு வாங்கிகொண்டு ஆவணத்தை தருவதாக சொன்னார்கள். யுவராஜ் பணத்தை வாங்க மறுத்துவிட்டதால் முரளிதரனிடம் கொடுக்குமாறு சொல்லிவிட்டார். நான் அது பற்றி யுவராஜிடம் கேட்டதற்கு பத்திரம் முரளிதரனிடம் இருப்பதால் அவரிடம் பணத்தை கொடுத்து பத்திரத்தை வாங்கிகொள்ளுமாறு சொன்னார். முரளிதரனை எனக்கு எப்படி தெரியும் என்று சொன்னால் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த போது தெரியும். யுவராஜ் தான் அடமானம் வாங்குகிறார் என்பதாக எனக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் தெரியும் என்றால் சரிதான். முரளிதரனிடம் பணத்தை கொடுத்த பின்னர் நான் பத்திரத்தை கேட்டதற்கு பின்னர் தருவதாக சொன்னார். பத்திரத்தை திரும்ப வாங்காமல் எதற்காக பணத்தை கொடுத்தேன் என்றால் பணத்தை கொடுத்தால் தான் பத்திரத்தை கொடுப்பதாக சொன்னார்கள். அதனால் பணத்தை கொடுத்தேன். பணத்தை வாங்கிவிட்டு பத்திரத்தை பின்னர் தருவதாக சொன்னார்கள். நான் பலமுறை போன் செய்து போனை எடுக்கவில்லை. அது பற்றி யுவராஜிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். பணத்தை வாங்கிகொண்டு பத்திரத்தை திரும்ப கொடுக்காததற்கு போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. கடைசியாக முரளிதரனிடம் எப்போது பேசினேன் என்றால் பணத்தை கொடுக்கும்போது பேசியது. தேதி ஞாபகம் இல்லை. வழக்கு 2024ல் தாக்கல் செய்துள்ள நிலையில் கடந்த 11 வருடங்களாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் யுவராஜ் பத்திரத்தை வாங்கி தருவதாக அவர் பொறுப்பு என்பதாக சொன்னார். அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. யுவராஜ் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

3) எனது சொத்தை அடமானம் செய்துள்ள நிலையில் ஆவணமானது ஏமாற்றி எழுதப்பட்டுள்ளது என்று எப்படி எனக்கு தெரியும் என்றால் முரளிதரன் 3-4 வருடங்களுக்கு முன்பு கிராம உதவியாளரிடம் பட்டா மாற்ற சென்றுள்ளார் அப்போது எங்கள் இடம் பற்றி கிராம உதவியாளருக்கு தெரியவந்து எனது கணவரிடம் சொல்லியுள்ளார். அதன்படியாக விவரம் எனக்கு தெரியும். அதன் பின்னர் நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் ஆவணமானது பவர் ஆவணமாக எழுதப்பட்டுள்ளது என்று தெரிந்து வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுத்தேன். நாங்கள் வில்லங்கம் எடுத்து பார்த்தோமா என்றால் இல்லை. முரளிதரன் கிராம உதவியாளரிடம் கொடுத்த ஆவணங்களை பார்த்தோம். 2ம் பிரதிவாதி தினேஷ்குமார் யார் என்றால் முரளிதரன் எங்கள் இடத்தை தினேஷ்குமாருக்கு பவர் மூலமாக விற்றுள்ளார். எப்போது விற்றுள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். நாங்கள் வில்லங்கம் பார்த்து அதன் படியாகத்தான் பிரதிவாதிகள் எங்களை ஏமாற்றிய விவரம் தெரியும் என்பதாக வழக்கில் சொல்லியுள்ளபடி எதுவும் இல்லை என்றால் சரிதான். 2023 ம் வருடம் வரை முரளிதரனுடன் பேசிக்கொண்டிருந்ததாக வழக்கில் சொல்லியுள்ளபடி எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். வழக்கறிஞர் அறிவிப்பில் 2023 வரை முரளிதரனுடன் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெயரில் வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். அசல் ஆவணம் இல்லாமல் எவ்வாறு வரி செலுத்த பெயர் மாற்றம் செய்தேன் என்றால் அசல் ஆவணம் கேட்கவில்லை. பணம் கொடுத்து வீட்டு வரி, குடிநீர் வரி பெயர் மாற்றம் செய்துகொண்டோம். நான் கிரயம் வாங்கி தான் வீடு கட்டப்பட்டது. நான் பிரதிவாதிகள் அனுமதியின் பேரில் தான் வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் யுவராஜிடன் எனது சொத்தை விற்பனை செய்துகொடுக்குமாறு கேட்டேன் என்றும் அதன்படியாக யுவராஜ் சொத்தை விற்பனை செய்ய முரளிதரனிடம் அழைத்து சென்றார் என்று சொன்னால் சரியல்ல. நான் முரளிதரனிடமிருந்து ரூ.3 லட்சம் தொகை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வில்லங்கம் பார்த்து அதன் படியாகத்தான் பிரதிவாதிகள் எங்களை ஏமாற்றிய விவரம் தெரியும் என்பதாக பிராதில் சொல்லியுள்ளபடி எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு 2011ல் முரளிதரனுக்கு பவர் எழுதிகொடுத்த விவரம் பற்றி தெரியும் என்றும், வழக்கிறக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 வில்லங்க சான்று 15.09.2024 ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வில்லங்கத்தை பார்த்துதான் ஆவண விவரம் தெரிந்தததாக

பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதிகள் ஆவணம் பற்றி தெரிந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் வீட்டு வரி மற்றும் பட்டா உள்ளதால் வெளிநபர் தூண்டுதலின் பேரில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 15.07.2010 தேதியில் நான் முரளிதரனிடம் ரூ. 3 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு அதற்கான பண பற்று ரசீது எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த பண ரசீதினை பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார் என்றால் நான் ரசீது எதுவும் எழுதிகொடுக்கவில்லை. எனக்கு பிரதிவாதிகள் ஆவண விவரம் ஆரம்பத்தில் இருந்து தெரியும் என்றும் பிரதிவாதிகளிடமிருந்து பணம் பெறும் நோக்கில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள பதில்கள் மற்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முரண்பாடாக உள்ளது என்றும் எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/ A.Mohamed Ali,<br>Additional Subordinate Judge,<br>Kancheepuram.